# எம்பிலிபிட்டிய நகர சபை
# இரத்தினபுரி மாவட்டம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 யூன் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் எம்பிலிபிட்டிய நகர சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எம்பிலிபிட்டிய நகர சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,391,059 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,192,806 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,497,431 ஆக இருந்தது

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

09 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 36,528,865 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,379,843 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 4,205 | 3,153 | 15,062 |
| (ii) | வாடகை | 2,115 | 2,061 | 1,276 |
| (iii) | அனுமதிப்பத்திரக் | 1,007 | 1,007 | - |

கட்டணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஏனைய வருமானம் | 19,720 | 11,283 | 8,983 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 300,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,877,526 |

### 2.3.3 விளம்பரப் பதாதைகள் கட்டணம்

---

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அத்தியாயம்) 157(7)(உ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நகரசபை எல்லையினுள் காட்சிப்படுத்தப்பட்ட சகல நிலையான மற்றும் தற்காலிக விளம்பரப் பதாதைகள் நகர சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஏதாவது கட்டணம் செலுத்தி காட்சிப்படுத்த வேண்டிய போதிலும் 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரப் பதாதைகளிலிருந்து பாரிய அளவில் அனுமதி பெறப்படாத அறிவித்தல் பதாதைகள் இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் தெரிவின் பிரகாரம் ரூபா 71,550 தொகை சபையினால் இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 ஆதனவரி

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக ரூபா 10,000 இற்கும் ரூபா 50,000 இற்கும் இடையில் நிலுவையாக இருந்த 139 ஆதனவரி அலகுகளிலிருந்தும் அறவிடவேண்டிய மொத்த நிலுவை ஆதனவரி அளவுகள் ரூபா 2,678,205 தொகையும், ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்குமிடையே நிலுவையாக இருந்த 09 ஆதனவரி அலகுகளிலிருந்தும் 545,812 ஆகவும் இருந்தன.

(ஆ) ஒரு ஆதனவரி அலகிலிருந்து அறவிடுவதற்குள்ள நிலுவை வரித் தொகை அளவு கூடிய பெறுமதியைக் கொண்ட 06 வரியிறுப்பாளர்களுக்குரிய 37 ஆதனவரி அலகுகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரித் தொகை ரூபா 1,035,857 ஆக இருந்தது.

(இ) ஆதனவரி கணனி மயப்படுத்தும் போது சில சொத்துக்களின் உரிமையாளர்கள் இனங்காணப்படாதிருந்ததுடன் கணனி முறைமையை நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 நவம்பர் 01 ஆந் திகதி வரையில் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாத 159 வியாபார நிலையங்களிலிருந்து அறவிடவேண்டியிருந்த மொத்த அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 219,350 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் வியாபார அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்படிவங்கள் பெறுதல் மற்றும் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்கள் என்பன முறையான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 மோட்டார் வாகனங்கள் தரிப்பிடக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கட்டணமாக மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 162,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம் அறவிடுவதற்காக உப விதிகளை விதித்து வருமானத்தைப் பெறுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.7 கடை வாடகை

02 கடைகளில் 06 மாதங்கள் தொடக்கம் 3½ வருடங்கள் வரையான கால இடைவெயியில் நிலுவை வாடகையான ரூபா 61,000 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பள்ளேகம 01 ஆம் இலக்க மீன் கடை

வாடகைக்கு விட்ட வகையில் அறவிடமுடியுமாக இருந்த வருமானம் ரூபா 10,704 தொகை குறைவாக சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

மூடப்பட்டிருந்த கால்நடை வள விற்பனை நிலையத்தில் குளிரூட்டியை உள்ளடக்கிய 04 சொத்து விடயங்கள் பய்னபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டன.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏதாவது பொருள் அல்லது சேவையொன்று வழங்கும் போது பெறுமதிசேர் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் சொத்துக்களை வாடகைக்கு வழங்கும் போது வைப்பிலிடப்படுகின்ற உடன்படிக்கைப் பிணைக்காக மேற்கூறப்பட்ட அடிப்படையில் பெறுமதிசேர்வரி அறவிடுதல் தேவையற்றிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு வழங்கும் போது ரூபா 228,368 தொகையான பெறுமதிசேர்வரி பெறப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2005 யூன் 08 ஆந் திகதிய 396/18 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 26,500 படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 2009 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பீஎப்/437 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றுநிருபத்தின் 03 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்கள் தமது நிறுவனத்திற்குத் தேவையான சகல காப்புறுதிப் பூட்கைகளும் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தில் அல்லது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறவேண்டியிருந்த போதிலும் சபைக்குரிய எல்ஈ 7497 ஆம் இலக்க உழவு இயந்திரம் மற்றும் எஸ்ஜீகியூவீ 4475 ஆம் இலக்க முச்சக்கர வண்டி என்பவற்றின் 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 35,311 தொகை செலுத்தி அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்துக்குப் புறம்பான காப்புறுதி நிறுவனத்திடமிருந்து காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 51.4 மில்லியன் கிரயமான மழைநீர் வடிகாண் செயற்திட்டத்திற்காக ரூபா 41 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து மானியமாகக் கிடைத்திருந்ததுடன் எஞ்சிய ரூபா 10.4 மில்லியன் கடன் தொகை உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெறப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் உரிய பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிறைவேற்றப்படாமையினால் கடன் தொகை மற்றும் வட்டி செலுத்துகைகள் சபையினால் நிராகரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நகரில் காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கப் பதிலாக வசிப்பாளர்களுக்கு தற்காலிக கடைகளை நிர்மாணித்து வழங்கவதற்காக ஒரே தடவையில் செலுத்தும் பணமாக அவர்களிடமிருந்து ரூபா 3,782,667 தொகை மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்ததுடன் தற்காலிக கடைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,031,979 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் எம்பிலிபிட்டியப் பஸ் நிலையத்தை அபவிருத்தி செய்த அதே வேளை சபையினால் தற்காலிக மற்றும் பாதுகாப்பற்ற கடைகள் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தினால் அதன் அபிவிருத்தி செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்ததுடன் தற்காலிக கடைகளை நிர்மாணிப்பதற்காக செலவிட்ட மொத்த தொகையும் பயனற்ற செலவினமாக இருந்தது.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 177(1) இன் பிரகாரம் வருமான மேற்பார்வையாளர்களினால் தமக்குக் கிடைக்கின்ற மொத்தப் பணமும் நாளாந்தம் அல்லது முடியுமான வரை கூடியகெதியில் அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 29 சந்தர்ப்பங்களின் போது சேகரிக்கப்பட்ட பல்வேறு வருமான வகைகளுக்குரிய ரூபா 437,563 தொகையான வருமானம் தாமதிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) இன் பிரகாரம் ஏதாவது செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட முற்பணம் அந்தச் செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாகவே தீர்க்கப்பட வேண்டியிருந்ததுடன் 2011 நவம்பர் 01 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 1,098,774 ஆக இருந்தது.

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் இரண்டு வருடங்களைக் கடந்த வைப்புக்களை வலுவிழக்கச் வெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த போதிலும் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை வைப்புச் செய்யப்பட்ட 43 உடன்படிக்கை பிணைகளில் ரூபா 772,365 தொகை மற்றும் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 15 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 169,555 தொகையான கேள்விப் பிணை வைப்புக்களுக்காக அதன் பிரகாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடகாலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 960,470 ஆக இருந்ததுடன் அசைவுறாது காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,072,947 ஆக இருந்தது.

(எ) மெய்மையாய்வச் சபை அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்படாத 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 253,739,695 ஆக இருந்தது.

(எ) கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(உ) வாகனப் பயன்பாடு